***DEPOSITION OF WITNESS***
**IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM**

| | | |
|---|---|---|
| **MCOP No. 307/2023** | **நாள் – 19.11.2025** | **சாட்சி – ம.சா.2** |

*Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).*

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.சின்னப்பா | தந்தை பெயர் | திரு.கோவிந்தசாமி |
| ஊர் | மேலப்பிள்ளையாம்பேட்டை | தாலுக்கா | திருவிடைமருதூர் |
| தொழில் | தினக்கூலி | வயது | 45 |

**முதல் விசாரணை:**

நான் மனுதாரர் தரப்பு சாட்சி 2 ஆக சாட்சியம் அளிக்கிறேன். மனுவில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். முதல் நிலை சாட்சியத்திற்கான பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது.

**3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தில் அடிப்பட்டவரும் நானும், ஒரே தெருவை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். எத்தனை ஆண்டுகளாக விபத்தில் அடிப்பட்டவரை தெரியும் என்றால் 4 ஆண்டுகளாக தெரியும். விபத்து சம்பந்தமாக காவல் துறையில் நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக விபத்தில் அடிப்பட்டவரின் தாயார் சொல்லி தெரியும். காவல் துறையினர் விபத்து சம்பந்தமாக என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். காவல் துறையினர் என்னை விசாரிக்காததற்கான காரணம் என்னென்றால் நான் அடிக்கடி ஊரில் இருக்கமாட்டேன். இந்த வழக்கு சம்பந்தமாக குற்ற வழக்குகளில் நான் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், விபத்தில்

அடிப்பட்டவர் எனது தெருக்கார் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1, 2 ஆம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

*Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

G. MANIKANDARAJA
Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2025.11.19 16:24:50 +0530

*Additional Chief Judicial Magistrate,*
Kumbakonam.